Imam Shafi (Rah) Matric. Hr. Sec. School

# Newsletter

August- 2026

## Hadith of the Month

**Prophet Muhammad Said :**

**"By his good character a beliver will attain the degree of one who prays during the night and fasts during the day"**

**- Abu Dawood**

## Research Based and Engineering Projects

A training programme on Research Based Science and Engineering Projects was conducted on 08.08.2026 at Jamal Mohamed College and OMEIAT (Autonomous),Tiruchirappalli. The programme was attended by the Science and Computer Science teachers of our school.

## ஆராய்ச்சி அடிப்படையிலான அறிவியல் மற்றும் பொறியியல் திட்டங்கள்

ஆராய்ச்சி அடிப்படையிலான அறிவியல் மற்றும் பொறியியல் திட்டங்கள் தொடர்பான பயிற்சி, 08.08.2026 அன்று திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்றது. இதில் அறிவியல் மற்றும் கணினித் துறை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



## Vegetable Carving Competition (காய்கறி செதுக்குதல் போட்டி )

To exhibit the creativity and artistic talent of the students, a Vegetable Carving Competition was organized for Grade IX students on 08.08.2026 at our school. The competition was participated in enthusiastically by all the students and their talents were showcased brilliantly.

மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் கலைத்திறனை வெளிப்படுத்தும் வகையில், நம் பள்ளியில் 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 08.08.2026 அன்று காய்கறி செதுக்குதல் போட்டி நடைபெற்றது. இதில் அனைத்து மாணவர்களும் ஆர்வமுடன் கலந்து கொண்டு, தங்களது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தினர்.



## 7's Football Tournament (எழுவர் கால்பந்து போட்டி)

In memory of our School Correspondent, HAJI M.S.TAJUDEEN 7's Football Tournament was conducted grandly from 10.08.2026 to 14.08.2026 at the Imam Shafi Academic, Sports and Knowledge Development Village.



The tournament was participated by students from various schools with great enthusiasm. Our school students also participated exceptionally well, displayed their talented performance, and secured the First Place.As a token of appreciation, the winners were honoured with a Rolling Trophy, Cash Prize and Certificates.

நம் பள்ளித் தாளாளர் ஹாஜி எம். எஸ். தாஜுதீன் நினைவாக எழுவர் கால்பந்து போட்டி, 10.08.2026 முதல் 14.08.2026 வரை இமாம் ஷாஃபி அகாடமிக், விளையாட்டு மற்றும் அறிவு வளர்ச்சி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இப்போட்டியில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். நம் பள்ளி மாணவர்களும் சிறப்பாகப் பங்கேற்று, தங்களது திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி முதலிடம் பெற்று வெற்றி பெற்றனர்.வெற்றி பெற்ற நம் பள்ளி மாணவர்களைப் பாராட்டும் வகையில், அவர்களுக்கு சுழல் கோப்பை மற்றும் ஊக்கத்தொகையும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.







## Independence Day Celebration (சுதந்திர தின விழா)

In remembrance of our martyrs, the Independence Day was celebrated grandly on 15.08.2026 at our school. The National Tricolour was hoisted by our respected Principal, which added grandeur to the celebration. The programme was attended by students and teachers, and various cultural programmes were organized.



தியாகிகளை நினைவுகூரும் வகையில், நம் பள்ளியில் 15.08.2026 அன்று சுதந்திர தின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் நம் பள்ளி முதல்வர் அவர்கள் மூவர்ண தேசியக் கொடியை ஏற்றி விழாவைச் சிறப்பித்தார்.இந்நிகழ்வில் மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். மேலும், பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

## **Fruit Salad Day** பழச் சாலட் தயாரிக்கும் நிகழ்வு





To exhibit the creativity and practical skills of the students, a Fruit Salad Preparation Activity was conducted on 17.08.2026 at our school using various fruits. The activity was participated enthusiastically by L.K.G and U.K.G students under the guidance of KG Teacher The event provided joy and experiential learning to the students.

நம் பள்ளியில் மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் செயல்திறனை வெளிப்படுத்தும் வகையில், 17.08.2026 அன்று பழங்களைப் பயன்படுத்தி பழச் சாலட் தயாரிக்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் எல்.கே.ஜி. மற்றும் யு.கே.ஜி. மாணவர்கள் ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் பழச் சாலட்டை ஆர்வமுடன் சிறப்பான முறையில் தயாரித்துக் காட்டினர். இந்நிகழ்வு மாணவர்களுக்கு மகிழ்ச்சியையும், செயல்வழிக் கற்றலையும் அளித்தது.

## **Maths Exhibition - Legends in Math** (கணிதக் கண்காட்சி)








In memory of mathematical legends and to exhibit the mathematical skills and creativity of the students,A Maths Exhibition was conducted grandly on 29.08.2026 at our school.The exhibition was participated enthusiastically by the students from Grade 6 to 12. Various mathematical models, innovative creations and mathematical activities were prepared and the uses and procedures were explained the students.

கணித மேதைகளை நினைவுகூரும் வகையிலும், மாணவர்களின் கணிதத் திறனையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்தும் வகையிலும், நம் பள்ளியில் 29.08.2026 அன்று கணிதக் கண்காட்சி சிறப்பாக நடைபெற்றது.

இக்கண்காட்சியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். மாணவர்கள் பல்வேறு கணித மாதிரிகள், புதுமையான படைப்புகள் மற்றும் கணிதச் செயல்பாடுகளைத் தயாரித்து, அவற்றின் பயன்பாடு மற்றும் செயல்முறைகளை விளக்கிக் காட்டினர்.

# Community Lunch for Communal Harmony (சமூக நல்லிணக்க மதிய உணவுத் திட்டம்)

With the aim of developing humanity and communal harmony among students, a "Community Lunch for Communal Harmony" programme was organized on 31.08.2026. Lunch was shared by the students of Grade 11 students of various religions, and unity and brotherhood were exhibited by them.

மாணவர்களிடையே மனிதநேயம் மற்றும் சமூக நல்லிணக்கத்தை வளர்க்கும் நோக்கில், 31.08.2026 அன்று "சமூக நல்லிணக்க மதிய உணவுத் திட்டம்" நடைபெற்றது. இதில் 11ஆம் வகுப்பு மாணவர்கள் பல்வேறு மதங்களைச் சேர்ந்த மாணவர்களுடன் மதிய உணவைப் பகிர்ந்து கொண்டு, ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை வெளிப்படுத்தினர்.







## 7's FOOT BALL











